REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

துர்காபூர் உருக்குத் தொழிற்சாலை ரூ. 126 கோடி மதிப்புடையதாம்

மேற்கு வங்க மாநிலத்தில் துர்காபூரில் அமைக்கப்பட விருக்கும் உருக்குத் தொழிற்சாலையின் மதிப்பு ரூ. 126 கோடியாம்!

துவங்கும் நாளிலிருந்து நான்கு ஆண்டுக் காலத்திற்குள் இந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்த ஆலை அமைப்பு குறித்து பிரிட்டிஷ் நிபுணர்கள் தயாரித்துள்ள திட்டப்படியே இந்தத் தொழிற்சாலை அமையும் என்றும் கூறப்படுகிறது. இந்த நகல் திட்டம் இப்போது இந்தியப் பேரரசின் பரிசீலனையிலிருக்கிறதாம்.

மலர் 3] சென்னை: கார்த்திகை 20உ செவ்வாய் (6—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 21உ புதன் (7—12—55) [இதழ் 149

புயல், வெள்ளக் கொடுமைகளால் தமிழகம் தேம்பியழுகிறது!

இந்திய பேரரசின் கவலையின்மை!

பலியானோர் ஆயிரம் பேர்களா?

பல கோடி ரூபாய் பொருட்சேதம்

சென்னை, டிச. 6—

கொடுமழையும், கோரப்புயலும் தமிழகத்தைத் தேம்பி அழச் செய்துவிட்டன.

தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள் இந்த அவல நிலைக்கு ஆளாகியிருக்கின்றன.

இராமநாதபுரம மாவட்டத்தின் பெரும் பகுதியை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பெரும் வேதனை சூழ்ந்திருக்கிறது.

தஞ்சையில் ஏற்பட்ட புயலுக்கும், பெருமழைக்கும் பலியான மக்கள் தொகை குறித்து வந்துகொண்டிருக்கும் செய்திகள் நம்மைத் திடுக்கிடவைக்கின்றன.

140 பேர் பலி என்று துவங்கும் செய்திகள், 1000 பேர் வரை பலி கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதுவரை செல்கின்றன.

பல்லாயிரம் கால்நடைகள் கொல்லப்பட்ட சோகச் செய்திகள் குவிந்தவண்ணமுள்ளன.

கடைசியாகக் கிடைத்துள்ள தகவல்படி, இராமநாதபுரம் மாவட்டந்தான் அதிகமான கொடுமைக்கு இலக்காகியிருப்பதாகத் தெரியவருகிறது.

பரமக்குடி, காரைக்குடி, திருவாடானை, இராமநாதபுரம் முதுகுளத்தூர், சிவகங்கை, திருப்பத்தூர் முதலிய வட்டங்கள் முழுவதும் ஒரே வெள்ளக் காடாகியிருக்கின்றன.

எந்தவிதப் போக்குவரத்தும் இல்லாது போய்விட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் இந்தக் கொடுமைகளினுல ஏற்பட்டுள்ள சேதங்களின் விபரங்கள் நெஞ்சைக் கலக்குகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும உயிர்ச்சேதம 197 என்று கூறப்படுவதுகூட 'உத்தேச மதிப்பு' என்றும், கணக்கிடப்படவேண்டிய பகுதிகள் ஏராளமிருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினுலும், புயலினுலும் விளைந்துள்ள சேதங்களைக் கணக்கிடுவதற்கே இயலாத நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் தொடர்புகொள்ள முடியாத சோக நிலை ஏற்பட்டிருக்கிறது.

இத்தனை சோகச் செய்திகள் வெளிவந்த பின்னும், இன்று காலை வரை இந்தியப் பேரரசின் 'கருணை உள்ளம்'—'ஏக இந்திய மனப்போக்கு'—ஒரு அனுதாபச் செய்தி அனுப்பக்கூட இடந்தரக் காணும், தென்னுட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பெரும் சோக நிலை குறித்து இந்தியப் பேரரசு கவலை ஏதும் கொண்டிருப்பதாகவே தெரியவில்லை—இன்று காலைவரை!

கடந்த ஆறு நாட்களாக தமிழக மக்களை உலுக்கிவரும் இந்த சோக நிகழ்ச்சிகள், இந்தியப் பேரரசின் பேருள்ளத்தை இன்னும் தொடவில்லை.

சென்னை முதன் மந்திரி காமராசர், மராமத்து மந்திரி சேதுபதி, உயர்தர அதிகாரிகள் ஆகியோர் விமானமூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்திருக்கின்றனர்.

முதன் மந்திரி காமராசர் பரமக்குடியைத் தலைமை இடமாகக் கொண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண மளிக்கும் வேலையில் நேரடியாக ஈடுபடுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவருடன் உயர்தர அதிகாரி ஒருவரும் உடனிருந்து நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவார்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு முதன் மந்திரி தஞ்சையில் முகாமிடுவார் என்றும் தெரிய வருகிறது.

இப்போது சேதுபதியும், இதர அதிகாரிகளும், தென்பகுதிகளுக்கு நிவாரணமளிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வெள்ளத்திலுலும், புயலினுலும் வீடுவாசல் இழந்து தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு உணவுப் பொருட்கள் உடனடியாகக் கிடைப்பதற்கான வேலையில் சர்க்கார் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

எந்தவிதப் போக்குவரத்தும் அற்றுப் போயிருக்கும் பகுதியில்; நின்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பண்டம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிவாரண வேலைகளைத் துரிதமாகக் கவனிக்க விமானம் ஒன்று தந்து உதவுமாறு, சென்னை சர்க்கார் இந்தியப் பேரரசைத் தந்தி மூலம் கேட்டிருந்தனர்; ஆனுல் இன்று காலை வரை இந்தியப் பேரரசு விமானம் தருவதற்குச் சம்மதம் தெரிவித்ததாகத் தெரியக் காணும்!

படகுகள் மூலமும் உணவுப் பண்டங்கள் வழங்க ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கவனிக்க அதிகாரிகள் சென்றிருக்கின்றனர்.

தஞ்சையில் வேதாரண்யமும், இராமநாதபுரத்தில் பரமக்குடி, திருவாடானைப் பகுதிகளும்தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டவையாக உள்ளனவாம்

இந்த மாவட்டங்களில் எல்லாம் மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம் குறித்து, ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதைத் தவிர வேறு வழியற்று தேம்பியழுத வண்ணமுள்ளனர்.

அதிகாரப் பற்றற்ற முறையில் வெளி வந்துள்ள செய்திகளின்படி கணக்கிட்டால் இந்த முறை புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பொருள் நஷ்டம் பல கோடி ரூபாய் இருக்கும் என்று தெரிய வருகிறது

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், மாவட்டக் கழக உறுப்பினருமான தோழர் அன்பில் தருமலிங்கம், திருச்சியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முடிந்தவற்றை மாவட்ட மன்றத் தலைவருடனும், சில காங்கிரஸ் தலைவர்களுடனும் சென்று பார்வையிட்டுவந்திருக்கிருர்.

அதேபோல, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், மதுரை நகரசபை உறுப்பினருமான தோழர் எஸ். முத்து அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில், மதுரையை அடுத்துள்ள பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைகளை அறிந்துவந்திருக்கிருர்.

ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் நிவாரண வேலைகளில் ஈடுபட்டு உதவுமாறுதோழர்கள் முத்துவும், தருமலிங்கமும் தெரிவித்து வந்திருக்கின்றனர்.

இதுவரை கிடைத்துள்ளதெல்லாம் உத்தேசமானவை என்றும் சரியான போக்குவரத்து வசதிகள் கிடைத்த பின்னரே, கோரங்களின் முழு உருவம் தெரியமுடியும் என்றும் முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிருர்.

மானுமதுரைக்கும் — தனுஷ்கோடிக்கும் இடையேயும், அதேபோல காரைக்குடிக்கும் — அறந்தாங்கிக்கும் இடையேயும், திருத்துறைப்பூண்டியிலும், இரயில் போக்குவரத்து இன்னும் ஒரு கிழமைக்கு ஏற்பட முடியாதவாறு இரயில் பாதைகள் துண்டிக்கப்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

சோகச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

மத்திய மந்திரி சபையில் பிளவு?

தெற்கு-வடக்கு வேற்றுமையே காரணம்?

டி. டி. கிருஷ்ணமாச்சாரி—குல்சாரிலால் நந்தா லடாய்

புதுடில்லி, டிச. 5—

இந்தியப் பேரரசின் அமைச்சரவையில், இருவரிடையே கைத்தறி நெசவுத் தொழில் குறித்து பலத்த கருத்து வேறுபாடு உருவாகி வருவதாயும், இதற்கு 'வடக்கு—தெற்கு' என்ற பாகுபாடும் மந்திரிசபை நெருக்கடிக்குக் காரணமாக அமையலாம் என்றும் தெரியவந்திருக்கிறது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு நீடித்துத் தொடர்ந்து வேலை கிடைத்து வருவதற்காக, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகை செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

கிராம, சிறு தொழில் குறித்த கார்வே குழுவினர், துணி உற்பத்தியை அதிகரிக்க, கைத்தறியை உபயோகிக்கலாம் என்று தெரிவித்துள்ள யோசனைக்கு ஒப்ப, கைத்தறி நெசவுக்குத் தேவையான நூல் உற்பத்திக்கு 'அம்பர் சர்க்கா' என்ற ஒரு 'சர்க்கா'வின் உபயோகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கின்றனர்.

இந்தச் சிபாரிசை அமுல் செய்வதானுல், ஆலைகளின் நூற்புச் சக்தியை அதிகரிக்கக் கூடாது என்றும், புதிய கதிர்கள் அனுமதிக்கப்படக்கூடாது என்றும் திட்ட மந்திரியான குல்சாரிலால் நந்தா என்பார் குறிப்பிடுகிருராம்.

ஆனுல், தொழில்—வர்த்தக மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 'அம்பர் சர்க்கா' இன்னும் பரிசீலனை நிலையிலேயே இருப்பதாயும், தேவையின் விரிவுக்கொப்ப துணி உற்பத்தியும் அதிகரிக்க வேண்டுமானுல், 'அம்பர் சர்க்கா'வை நம்புவதினுல் பலனில்லை என்றும் கருதுவதுடன், ஆலைகளின் நூற்புச் சக்தியை அதிகரிக்க வேண்டும் என்றும், புதிய கதிர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் கோருகிருராம்.

நந்தா, தனது கருத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக, மக்கள் சபை உறுப்பினர்களைக் கூட்டிவைத்து, 'அம்பர் சர்க்கா'வினுல் வேகமாக நூல் நூற்க முடியும் என்பதைச் செய்து காட்டினுராம்.

என்றுலும், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நாட்டின் வளரும் பொருளாதார நிலையைச் சுட்டிக்காட்டி, அந்த நிலைக்கு 'அம்பர் சர்க்கா'வை நம்புவது பெரும் ஆபத்து என்றும் குறிப்பிட்டிருக்கிருராம்.

தென்னுட்டுக் கைத்தறியாளர்கள், பம்பாய் ஆலைகளைத்தான் தங்களுக்குத் தேவையான நூல்களுக்கு எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்பதால், இதைத் தவிர்க்கும் பொருட்டு, தென்னுட்டு ஆலைகள் பல நூற்புக் கதிர்களை அதிகரிக்க அனுமதி கோரியுள்ளன. புதிய கதிர்கள் இயங்க அனுமதிப்பது தடுக்கப்பட வேண்டும் என்று நந்தா கூறுவதற்குக் காரணம் 'அம்பர் சர்க்கா'வின் மீதுள்ள காதல் அல்ல—மாருக, பம்பாய் ஆலைகளின் மீதுள்ள 'அக்கறை'தான் என்று கூறப்படுகிறது.

தென்னுட்டில் நூற்புக் கதிர்கள் அதிகமானுல், பம்பாய் நூலுக்காக ஏங்கும் நிலை தென்னுட்டவருக்கு இருக்காது; இதனுல் பம்பாய் ஆலைகளின் ஏகபோக ஆதிக்கக் கொட்டம் குறையும்; எனவே, இதைத் தவிர்க்கத்தான் 'அம்பர் சர்க்கா'வைப் புகலிடமாகக்கொண்டு, கார்வே குழுவின் சிபாரிசுத் துணையுடன் குல்சாரிலால் நந்தா புதிய கதிர்கள் அனுமதிக்கக் கூடாது என்று கோருகிருராம்.

காங்கிரஸ் கட்சியினரின் மக்கள் சபை உறுப்பினர்களும் கூடி இது குறித்து விவாதித்திருக்கின்றனராம்.

மந்திரிசபையில் வடக்கு—தெற்கு என்ற எண்ணம், இப்படி ஒரு நெருக்கடி உருவத்தில் வெளித் தெரியும் அளவுக்கு வளர்ந்திருக்கிறதாம்!

பாக்தாத் ஒப்பந்தம்: நேரு கண்டனம்?

புதுடில்லி, டிச. 5—

"பாக்தாத் ஒப்பந்தம் வருந்தத்தக்க ஒன்று; அது துரதிருஷ்டம் வாய்ந்தது; அமைதி, பாதுகாப்பு ஆகிய இவ்விரண்டிற்கும் அது ஏற்ற ஒரு ஒப்பந்தம் அல்ல,"

என்று, இந்தியப் பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறியிருக்கிருர்,

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6-12-'55 செவ்வாய்

என்ன செய்யப்போகிருர்?

புயல்—கோரப் புயல்—கொடுமை பல புரிந்துவிட்டது!

மழை—பேய் மழை—பெரு வெள்ளம்—கோரம் பல புரிந்துவிட்டது!

உயிர்ச் சேதம் — பொருட் சேதம் — கால் நடைகள் கொல்லப்பட்டன — வீதிகளில் நீர்ப்பெருக்கு—வீடுகள் இடிந்தன—கூரைகள் சாய்ந்தன—ஓடுகள் பறந்தன—மரங்கள் வீழ்ந்தன—பயிர்கள் நாசமாயின — போக்கு-வரத்துத் துண்டிக்கப்பட்டது — இருப்புப் பாதைகள் இடம் பெயர்ந்தன—தென்னையும், வாழையும் முறிந்து அழிந்தன!

வீடு வாசல் இழந்தோர், சொத்து சுகம் இழந்தோர் தொகை, ஆயிரக்கணக்கில்!

விளைந்துள்ள சேதங்களின் மதிப்பு, இன்னும் அதிகார பூர்வமாகக் கணக்கிடப்படவில்லை.

சென்ற 1952-ம் ஆண்டில் ஏற்பட்டதைவிட கொடுமை மிகுந்தது, இம்முறை வீசிய புயல்!

என்ற சோகச் செய்திப் பட்டியல் தமிழகத்தின் உணவுக் களஞ்சியமான தஞ்சைத் தரணியினின்றும், அடுத்துள்ள திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களினின்றும் கிடைத்தவண்ணமுள்ளன.

பெரும் புயலாலும், பேய் மழையாலும் கொடுமைக்காளானோரை சூழ்ந்து நிற்கும் சோகம், அவர்கள் விம்மியழும் காட்சி, மனித உள்ளம் கொண்டோர் அனைவரின் விழிகளிலும் நீர் தேக்கும்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு வீசிய புயலால் பாதிக்கப்பட்டோர் அனைவரும், திரும்பவும் தாங்கள் முன்பு பெற்றிருந்த வாழ்வு நிலை அடையும் முன்பே, மீண்டும் கொடுமைக்கு ஆளாக நேர்ந்திருப்பது நமது கவலையை மிகுவிக்கிறது.

சென்ற முறை தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் வீசிய புயல் விளைவித்த கொடுமைகளுக்கு ஆளான மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் போதுமான அக்கரை காட்டவில்லை.

மாநில சர்க்கார், நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவதில் துரிதமாகச் செயல்படவில்லை; தர முனைந்த சிறு சிறு உதவிகளையும்கூடத் தருவதில் பெரும் காலதாமதம் ஏற்பட்டதென்று குறைகூறப்பட்டது.

இந்தியப் பேரரசு, அந்த முறை, தஞ்சை, திருச்சி மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு உருப்படியான உதவி யேதும் செய்யவில்லை என்பதும் உலகறிந்ததே!

இந்த முறையும் அந்தக் குறைக்கு மாநில, இந்திய ஆட்சியாளர்கள் ஆட்படுவார்களேயானால், அவர்கள், இங்குள்ள மக்களின் கடுங்கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதில் ஐயமில்லை.

'நிவாரண வேலைகளைத் துவங்க அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறோம்; சேதங்களை அளவிட சென்னையிலிருந்து அதிகாரி சென்றிருக்கிறார்; முதன் மந்திரி காமராசர் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுகிறார்'—ஆறுதல் தரும் அறிவிப்புகளைத் தந்துவிடுவதுடன் மட்டும், சர்க்காரின் கடமை முடிந்துவிடாது.

சென்ற முறை நிவாரண வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டு செயலாற்ற முடியாமற்போனதற்கு உரிய காரணமாக, 'சர்க்காரிடம் பணம் இல்லை' என்ற பழைய பல்லவிதான் பாடப்பட்டது.

'மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்' என்று முன்பும்தான் கூறினார்கள்; ஆனால், நிவாரண வேலைகளுக்காகச் செலவிட அவர்களிடம் தரப்பட்ட பணம், தேவையான அளவில், பத்தில் ஒரு பகுதிகூட இருக்கவில்லை. இதனால் உடனடியாக வாழ்விழந்தோர் அனைவருக்கும் வாழ்வு தருவது இயலாததாயிருந்தது.

இந்த முறையும் அந்தத் தவறை, சர்க்கார் செய்யாதிருக்க வேண்டும்.

காமராசர், பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுவிட்டு, வாயளவில் ஆறுதல் தந்தால் அதுபோதுமானதல்ல; பாதிக்கப்பட்டோருக்கு செயலளவில் வாழ்வு தர முற்படவேண்டும்.

ஏற்பட்டுள்ள பெரும் நஷ்டத்தை தகுந்த அளவில் ஈடு செய்ய, "இந்த மாநில சர்க்காரின் 'நிதி நிலை' இடந்தரவில்லை" என்று கூறிவிடாமல், இது போன்ற நெருக்கடி நேரங்களிலெனும், தமது வடநாட்டு எஜமானர்கள் உதவி செய்ய வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு உணர்த்த சென்னை மாநில சர்க்கார் முற்படவேண்டும்.

வடநாட்டில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு, ஏராளமான மக்கள் வாழ்விழந்து பரிதவித்தபோது, இந்தியப் பேரரசு துடிதுடித்து, அந்த மக்கள் வாழ்வு பெறுவதில் உதவி பல புரிந்திருக்கின்றது என்பதை சென்னை மாநில சர்க்கார் நினைவுகூர்ந்து தஞ்சை, திருச்சி முதலிய பாதிக்கப்பட்டுள்ள மாவட்ட மக்களுக்கு நிவாரணம் தர உடனடியாக ஈடுபட வேண்டும் என்று எடுத்துரைக்கிறோம்.

காமராசர் என்ன செய்யப் போகிறார் என்பதை சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

திபெத் பள்ளிகளில் இந்தி

காலிம்பாங், டிச 3—

இந்திய எல்லைக்கப்பால் உள்ள நகரமான யாதுங் என்னும் இடத்தில் திபெத் சர்க்கார் ஒரு முதியோர் பள்ளியைத் திறந்திருக்கின்றனர். இந்தப் பள்ளியில் பல சீனர்களும் சேர்ந்து திபெத்திய, நேபாள மொழிகளுடன் இந்தி மொழியும் பயின்று வருகின்றனராம்.

குழந்தைகளுக்கென அதே நகரில் வேறொரு பள்ளியும் திறக்கப்பட்டிருப்பதாயும், அங்கு இந்தி, திபெத்திய, நேபாள, சீன, ஆங்கில மொழிகள் கற்றுத்தரப்படுவதாயும், இந்த இரண்டு பள்ளிகள்தான் யாதுங் நகர சரிதத்திலேயே முதல் பள்ளிகள் என்றும் கூறப்படுகிறது.

காலனி ஆதிக்கம்: மீண்டும் குருஷ்சேவ் கண்டனம்

பர்மாவுக்கு முடிந்த எல்லாவித உதவியும் தருவதாக வாக்குறுதி

தாங்கியி (பர்மா), டிச. 4—

"பர்மிய மக்கள் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்குமாகப் புதியதோர் வாழ்வு பெறுவதற்காக, மீண்டும் காலனி ஆதிக்கம் ஏற்படாமல் தடுப்பதற்கு சோவியத் ரஷ்யா தன்னாலான எல்லா உதவிகளும் செய்யும்.

"பர்மாவுக்கு, முடிந்த எல்லா உதவியும் செய்ய ரஷ்யா தயாராயிருக்கிறது; இந்த உதவிக்குப் பதிலாக பர்மா, தனது சகோதர அன்பைத் தந்தால் போதுமானது.

"நீங்கள் விரும்புகிறபடி நீங்கள் வாழ வேண்டும்—பிறர் விரும்புகிறபடி அல்ல—அதுவே எங்கள் விருப்பம்"

—என்று, ஷான் ராஜ்யத் தலைவர் தந்த விருந்தொன்றில் பேசுகையில், குருஷ்சேவ் குறிப்பிட்டிருக்கிறார்.

விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அருகிலிருந்த காடுகளை பர்மியத் துருப்புகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தனர். ஏனெனில், அந்தக் காடுகளில் புரட்சிக்காரர்கள் மறைந்திருப்பதாகக்கூறப்படுகிறது.

இந்த விருந்துக் கூட்டத்திலும் குருஷ்சேவ் காலனி ஆதிக்கம் குறித்து வன்மையான கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

"பிறருக்கு உழைப்பது என்றால் எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மன் ஆகிய நாடுகளுக்காக நான் சுரங்கங்களில்வேலை செய்திருக்கிறேன். எனவே பிறருக்கு வேலை செய்வதினால் நமக்கு என்ன லாபம் என்பது எனக்குத் தெரியும்.

"உங்களுக்கு நாங்கள் உதவ முடியும்; எங்களுக்கு நீங்கள் உதவ முடியும். உங்களுக்கு எஞ்சினீயர்கள் தேவையா?—சொல்லுங்கள்—அனுப்பி வைக்கிறோம். உங்கள் குழந்தைகளுக்குப் பொறி இயல் கல்விப் பயிற்சி வேண்டுமா—தருகிறோம்.

"நான் பட்டவர்த்தனமாகப் பேசுகிறேன்; இது சிலருக்குப் பிடிக்கவில்லை; ஆனால், நான் தொடர்ந்து அப்படியே பேசுவேன்—எல்லோரும் உண்மையைப் புரிந்துகொள்ளும்வரை!

"இந்தியா, பர்மா ஆகிய இடங்களில் நான் பேசியது சில பத்திரிகையாளருக்குப் பிடிக்கவில்லை; நான் உண்மை பேசுவதில் அவர்களுக்குத் திருப்தி ஏற்படாது.

"வெள்ளையர்கள் உங்களைக் கொள்ளையடித்தது உங்களது கலாசாரத்தை உயர்த்துவதற்காக அல்ல; மாறாக, அவர்களது நாகரீகத்தை காலனிகளில் புகுத்தி உங்களிடமிருந்து செல்வத்தைத் தட்டிப்பறிக்கத்தான் செய்தனர்—என்று நான் கூறினேன்; இது சில பத்திரிகையாளருக்குப் பிடிக்கவில்லை."

விருந்து நடைபெற்ற மண்டபத்தைவிட்டு வெளியேறியபோது, 'லண்டன் அப்சர்வர்' என்ற இதழின் நிருபரான பிலப்பீன் என்பார், 'உங்களுக்கு மிகவும் வந்தனம்; நீங்கள் ஒரு ரசமான மனிதர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உடனே குருஷ்சேவ், 'நீங்கள் உண்மையை எழுதினால், நீங்களும் ரசமான மனிதராக விளங்கலாம்' என்று குறிப்பிட்டாராம்.

இன்னும் இந்தக் கொடுமையா?

நியூயார்க், டிச. 2—

நியூயார்க் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இடத்திலுள்ள முடி திருத்தும் நிலைய உடைமையாளர்கள், ஒரு நீக்ரோ இசைக் குழுத் தலைவருக்கு மயிர் வெட்ட மறுத்துவிட்டனர் என்றும், இதனை, அந்த இசைக் குழுத் தலைவர் நீதிமன்றத்தில் முறையிட்டபோது, முடி திருத்தும் நிலையச் சொந்தக்காரர்களான வெள்ளைக்காரத் தம்பதிகளுக்கு 100 டாலர் அபராதம் விதிக்கப்பட்டது என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

முடிதிருத்தக உடைமையாளர், நீக்ரோக்களின் மயிரை வெட்டத் தமக்குப் பயிற்சி கிடையாது என்றும், அத்துடன், தமக்கு அதில் அக்கரையும் எதுவும் கிடையாது என்றும் குறிப்பிட்டாராம்.

ஆலைத் துணி உற்பத்தி கட்டுப்பாடு

மத்திய அமைச்சரிடை கருத்து வேற்றுமை?

புதுடில்லி, டிச. 3—

கடந்த சில ஆண்டுகளாக, கைத்தறிகளுக்கு உதவி அளிப்பது என்பதற்காக, ஆலைகளில் தறிகள் அதிகரிக்கப்படுவதை சர்க்கார் அனுமதிக்கவில்லை என்றும், ஆலைத்துணி உற்பத்திக்குக் கட்டுப்பாடு விதிப்பது குறித்து இதுவரையில் பல சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், ஆனாலும் இதுவரையிலும் எந்தச் சிபாரிசும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மக்கள் சபையில் ஆலைத் துணி உற்பத்திக்குக் கட்டுப்பாடு விதிப்பது குறித்து உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

"ஆலைத் துணி உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற அகில இந்தியக் காங்கிரஸ் குழுவின் தீர்மானத்தின் மீது மந்திரி சபையினரிடையே கடுமையாக முரண்பாடுகள் இருக்கதல்லவா?' என்று, தோழர் எச் வி. காமத் கேட்டபோது, அமைச்சர், 'அது, உறுப்பினரின் கற்பனை' என்று கூறியிருக்கிறார்.

உடனே தோழர் காமத், 'இந்த விஷயம் விரைவிலேயே அம்பலமாகப் போகிறது' என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார்.

மருத்துவக் கல்லூரி மாணவருக்கு விடுதி

ரூ. 20 இலட்சம் செலவில் அமையும்

சென்னை, டிச. 4—

சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு, மூன்று பகுதி விடுதி ஒன்றை ரூ 20,00,000 செலவில் அமைப்பதற்கான திட்டம் ஒன்றை சென்னை சர்க்கார் அங்கீகரித்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

அந்த விடுதி, ஜியார்ஜ்டவுனில் உள்ள பச்சையப்பன் விளையாட்டு மைதானத்தில் அமையும் என்றும், மூன்றாண்டுகளில் விடுதி கட்டி முடிக்கப்படும் என்றும், சுமார் 700 மாணவர்கள் தங்குவதற்கு அது வசதியாயிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இப்போது மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விடுதி, கீழ்ப்பாக்கத்தில், வாடகைக் கட்டிடம் ஒன்றில் அமைந்துள்ளது.

நெசவாளர்களுக்கு வீட்டு வசதி!

திட்டம் பரிசீலிக்கப்படுகிறதாம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கட்கு, ரூ. 18 இலட்சம் செலவில், காலனி ஒன்றுக்கு 200 வீடுகள் வீதம் குடியிருப்புக் காலனிகள் ஏற்படுத்தித் தருகின்ற இரண்டு திட்டங்கள் மத்திய சர்க்காரின் ஆலோசனையில் இருந்துவருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சென்னை மாநிலத்தில் பல 'செஸ்' நிதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இதுவரை ரூ. 1,52,08,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 90 இலட்சம் மதிப்பீடுகொண்ட திட்டங்களும் இந்திய சர்க்காரால்' அனுமதிக்கப்பட்டுள்ளனவாம்.

சென்னை மாநில கூட்டுறவு நெசவாளர் சங்கமும், ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நெசவுத் தொழிலுக்கான உறுப்புக்களை விநியோகம் செய்வதில் தனது முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவைதவிர, இந்தியக் கைத்தறித் துணியில் வெளிநாட்டு வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கென சர்க்கார் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் நல்ல 'முன்னேற்றம்' கண்டுள்ளதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அபிவிருத்தி வேலையையொட்டி, ஏடன், இரங்கூன், சிங்கப்பூர், இலங்கை ஆகிய இடங்களில் கைத்தறித் துணி மார்க்கெட்டிங் அதிகாரிகள் 4 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள இந்தியக் கைத்தறித் துணிக்கிடங்கில் மட்டும் ரூ 8 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புத் துணிகள் விற்பனையாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு-கோச்சியில் அணுப் பொருள்

ஆராய்ச்சி பற்றி பண்டிதர் தகவல்

புதுடில்லி, டிச. 4—

திரு-கொச்சி கடற்கரையில் பல இடங்களில் காணப்படும் 'மோனேசைட்' மணலில் யுரேனியம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மோனேசைட் மணலிலிருந்தே எல்லா யுரேனியமும் பிரித்தெடுக்கப்பட்டதாயும், அவற்றில் சில டன்கள் இப்போது சேமித்து வைக்கப்பட்டிருப்பதாயும் பிரதமர் தகவல் தந்திருக்கிறார்.

அணுசக்தி இலாகாவைச் சேர்ந்த பூகர்ப்ப நிபுணர்கள், யுரேனியம் எவ்வளவு கிடைக்கக் கூடும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமெரிக்காவில் இந்திய மாணவர் ஒருவர், அணுசக்தி உலையில் பயிற்சி பெற்று வருவதாயும், பயிற்சி முடிந்து திரும்பியதும் அவர் இந்திய அணுசக்தி நிறுவனத்தில் குறைந்தது மூன்றாண்டுகளுக்குப் பணி புரிவார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அகமதாபாத், டிச 4—

டில்லி 'எக்ஸ்பிரஸ்' இரயில் வண்டியின் உணவுப் பெட்டியில் உள்ள ஊழியர்கள் அனைவரையும் அகமதாபாத் இரயில்வே போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்றும், அந்தப் பெட்டியிலிருந்து சில சாராயப் புட்டிகளை அவர்கள் கைப்பற்றியதுதான் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

'மக்கள் நலத்துக்குக் கோயிலே தவிர கோயில் நலத்துக்காக மக்கள் இல்லை'

'வீணன பொருளற்றக் கோயில் விழாக்களை ஒழிக்க வேண்டும்'

'கோயில் பணத்தில் தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும்'

'சைவருக்குள் ஜாதி வேறுபாடு கூடாது'

"மடங்களுக்கும்—பொது மக்களுக்கும் தொடர்பு ஏற்படாமல் போனதாலும், பல திறப்பட்டவர் ஆட்சியாலும், நாட்டில், வேறு சமயங்கள் வளரலாயின. சைவம் சாதியற்ற சமயமாகக் கருதப்பட்டது. சைவ சமயத் தலைவர்கள் என்போரின் ஒழுக்கக் கேட்டாலும் சமயத்திற்கென்று ஒரு தலைவன் இல்லாமையாலும் கண்டவர்கள் எல்லாம் சமயத்தின் பேரால் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்ற கதைகளை எல்லாம் கூறி வந்த காரணத்தாலும், கோயிலைக் கண்காணிக்கும் தர்மகர்த்தாக்களுள் பெரும்பாலோர் கோயில் நிலங்களையும், சொத்துக்களையும் பாதுகாவாது விட்டமையாலும், பெரும்பாலான குருக்கள் மதிக்கத்தக்க நிலையில் இல்லாமையாலும், கோயில் வழிபாடு மக்கள் மொழியாகிய தமிழில் நடைபெறாமையாலும், 'சைவ சமய உயிர்நாடி' சிறிது சிறிதாக மறைந்து வருகிறது.

"சைவ சமய உயிர்நாடி பாதுகாக்கப்பட வேண்டுமாயின், 'சைவப் பிரசங்கம்' என்ற தலைப்பில் நடைபெறும் பொருத்தமற்ற பேச்சுக்கள் ஒழிக்கப்படல் வேண்டும். சைவப் பிரசாரகர்—சைவ சமயக் கொள்கைகளையும், அக்கொள்கைகளை வாழ்க்கையில் பின்பற்றும் முறைகளையுமே வற்புறுத்திப் பேச வேண்டும்.

"சைவக்குள் சாதி வேறுபாடு கூடாது என்பதை அழுத்தந்திருத்தமாகப் பேச வேண்டும்.

"வீணன பொருளற்ற கோயில் விழாக்களை ஒழித்து, கோயில் பணத்தைக் கொண்டு தொடக்க நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தி பிள்ளைகளுக்குப் பொதுக் கல்வியுடன் சமயக் கல்வியும் புகட்ட வேண்டும்.

"ஒழுக்கம் அனைத்திலும் மேலாகக் காக்கப்படல் வேண்டும்; ஒழுக்கம் உள்ள சைவப் பேச்சாளரையே பொது மக்கள் மதிப்பார்கள்.

"பொதுமக்களுக்குப் பயன்படும் படிப்பகம், நூலகம், மருத்துவமனை முதலியவற்றைச் சமயத்தின் பேரால் கோயில்களில் ஏற்படுத்திக் கோயில் கட்டும் பொது மக்கட்கும் தொடர்பு உண்டாக்க வேண்டும்.

"மக்கள் நலத்துக்குக் கோயிலே தவிர, கோயில் நலத்துக்காக மக்கள் இல்லை.

"பொது மக்களுக்குரிய பொதுச் சொற்பொழிவுகளும், சமயச் சொற்பொழிவுகளும் கோயில்களில் நடைபெற வேண்டும். சைவ சமய வரலாறும், கொள்கைகளும், அக்கொள்கைகளை வாழ்க்கையில் பின்பற்றும் முறைகளும் சிறுசிறு நூல்கள் உருவில் வெளிவருதல் வேண்டும்.

"இவையனைத்திற்கும் மேலாக நமது சமயம் காக்கப்படல்வேண்டும்; இடைக் காலத்தில் இதனுட் புகுந்த களையத்தக்கவற்றைக் களையவேண்டும் என்ற மனத்துணிபு சைவ நன்மக்களுக்கு ஏற்படுதல் வேண்டும்.

"எந்தப் பேச்சாளனும் பேசும் செய்தியைக் கேட்டுத் தலையாட்டிப் பொம்மைகளாக இல்லாமல், அறிவையும்— ஆராய்ச்சியையும் பயன்படுத்திக் கொள்ளத்தக்கவற்றைக் கொண்டு, தள்ளத்தக்கவற்றைத் தள்ளி வாழ்தலே சைவப் பொது மக்களின் கடமையாகும்.

"சிவபெருமான் தன் மனைவியாகிய உமா தேவியைத் தன் உருவத்தில் பாதியாகத் தாங்கியுள்ளான்; ஆதலால், 'மாதொரு பாதியன்' என்றும், அர்த்தநாரி என்றும் வழங்கப்படுகிறான்;—'ஒவ்வொரு சைவனும் தன் மனைவியைத் தன்னைப்போல் சமமாக நினைத்து, கருத்தொருமித்த இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு நல்வாழ்வு வாழ வேண்டும்'—என்பதை உணர்த்துவதே இம்மூர்த்தத்தின்சிறப்பு. இச்சிறப்பினை உணர்ந்து, சைவ இல்லறம் நடைபெறுமாயின், சைவர், வையத்துள் வாழ்வாங்கு வாழும் சைவ வாழ்க்கையை அடைந்தவர் ஆவர். இங்ஙனம் வாழ்கின்ற நல்வாழ்வே இன்பம் நிறைந்த பெருவாழ்வாகும்."

இவ்வாறெல்லாம், வேளுக்குறிச்சியில் நடைபெற்ற விழாவொன்றில் தலைமை தாங்கிய மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள் கழகம் கட்டுரைப் போட்டி

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் திருக்குறள் கழகத்தார், திருக்குறளின் உயர் கருத்துக்களை மக்களிடத்தில் பரவச் செய்யும் நோக்குடன், மாணவ மாணவிகளுக்கென திருக்குறள் கட்டுரைப் போட்டி ஒன்று ஏற்படுத்தியுள்ளனர்.

'உலகப் பொது அறநூல் திருக்குறள்—எப்படி?', 'தனித் தமிழ் வளர...?', 'வள்ளுவர் வகுத்த இல்லற இயலின் மாண்பு'—என்ற 3 தலைப்புகளுள் ஏதாவது ஒன்று குறித்து 3 முதல் 5 பக்கங்கள் வரை, காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அடுத்த சனவரித் திங்கள் 25-ந் தேதிக்குள், 'செயலாளர், திருக்குறள் கழகம், தென்மாப்பட்டு, திருப்பத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்' என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். கட்டுரைப் போட்டிக்கான நிபந்தனையாக, போட்டியில் 1 முதல் 6-ம் படிவம் வரை பயிலும் மாணவ மாணவிகள் கலந்துகொள்ளலாம் என்றும், குறிப்பிட்ட மாணவர்தான் கட்டுரை எழுதினர் என்பதற்குச் சான்றாக, கட்டுரையின் இறுதியில் பள்ளித் தலைமையாசிரியர் அல்லது தமிழாசிரியர் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் என்றும், கட்டுரையாளரின் தகுதிக்கேற்ப நடுவாளர்கள் மதிப்பெண் தருவர் என்றும் பரிசு பெற்ற கட்டுரையாளருக்கு திருக்குறள் விழாவின் போது பரிசுகளும் தகுதிப் பத்திரங்களும் வழங்கப்பெறும் என்றும் அறிவித்துள்ளனர்.

★

திருக்குறள் ஆராய்ச்சிக் கட்டுரைப் பரிசு

மேற்படி கட்டுரைப் பரிசுக்கு அனுப்பப்படும் கட்டுரைகளை முழு நீள அளவுள்ள 'புல்ஸ்கேப்' காகிதத்தில், ஒரே பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்பவேண்டுமென்றும், கட்டுரைக்குப் பக்க வரையறை கிடையாதெனினும் 50 பக்கங்களுக்கு அதிகமாகாமல் எழுதி அனுப்பப்பட வேண்டும் என்றும், கட்டுரைகள், கொடுக்கப்பட்ட தலைப்புகளில்தான் இருக்கவேண்டுமென்றில்லாமல் எப்பொருள் பற்றியதாகவும் இருக்கலாம் என்றும், பரிசு பெறாத கட்டுரைகள் திரும்ப அனுப்பப்படுவதால் போதிய அஞ்சல் தலைகள் வைத்து அனுப்பும்படி இந்தக் கட்டுரைப் பரிசுத் திட்டத்தை மேற்கொண்டுள்ள திருச்சி உறையூர் திருக்குறள் சிந்தனைக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

★

வள்ளுவர், வள்ளலார் போட்டிகள்

11—12—55 பிற்பகல் 2 மணியளவில், சென்னை மாணவர் மன்றச் சார்பில், டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில், திருக்குறள், திருவருட்பா போட்டிகள் நடைபெறும். ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் முதல் ஆறும் படிவ மாணவர்கள் வரை இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம் என்றும், மேலும் விவரம் வேண்டுவோர், 17, இரத்தின முதலி தெரு, சென்னை—1. என்ற முகவரிக்கு கடித மூலமாகவோ, நேரில் வந்தோ அறிந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★

திரு. வி. க. நினைவுப் பரிசுப் போட்டிகள்

"கல்லூரி வகுப்பு மாணவருக்கு சென்னை மாணவர் மன்றச்சார்பில் 11-12-55-ல் நடைபெறவிருந்த திரு. வி. க. பேச்சுப் போட்டி, பல கல்லூரிகளில் தேர்வு சமயமாக இருப்பதால்—பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சனவரித் திங்கள் முதல் வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் நாள், நேரம் முதலியன பின்னர் அறிவிக்கப்படும்" என்று அறிவிக்கப்படுகிறது.

'தமிழ் நாட்டிற்குத் தனி இரயில்வே அமைப்பு வேண்டும்'

'ஆந்திர கோரிக்கையைப் பின்பற்றி தமிழ் நாட்டினரும் கோர வேண்டும்'

மக்கள் சபை, சட்டசபை உறுப்பினர்களுக்கு எஸ். இராகவானந்தம் முறையீடு

எஸ். ஆர். எம் யூ. தலைவர் எஸ் இராகவானந்தம் அவர்கள், கீழ் வரும் வேண்டுகோளை விடுத்துள்ளார்:—

"வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்ட காலத்தில் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் பல இரயில்வேக்களும், தனிப்பட்ட கம்பெனிகளின் நிர்வாகத்தின் கீழ் பல இரயில்வேக்களும் இயங்கி வந்தன. இவைகளை, எல்லாம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து, பிறகு மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள பல இரயில்வேக்களாகப் பிரித்து, பொதுவான சட்டதிட்டங்கள் வகுத்து நடத்த வேண்டுமென்று இந்திய அரசாங்கம் கருதியது. நடைமுறையில் இந்தக் கொள்கையைக் கொண்டுவர முடியவில்லை. ஆனால், கம்பெனி நிர்வாகத்தில் உள்ள இரயில்வேக்களின் ஒப்பந்த காலம் முடிந்ததும் அவைகளை அரசாங்கமே எடுத்து நடத்திவந்தது.

"சுதந்திரம் வந்த பின்னும் சமஸ்தானங்களின் நிர்வாகத்தில் 21 இரயில்வேயும், இந்திய யூனியனின் நிர்வாகத்தில் 21 இரயில்வேயும் இருந்தபடியால் எல்லையை மாற்றியமைக்க முடியவில்லை. சமஸ்தானங்கள் யூனியனுடன் இணைக்கப்பட்ட பின்னர், எல்லா இரயில்வேக்களையும் ஒன்றாக இணைத்து, ஆறு பெரிய இரயில்வேக்களாக அவைகள் அமைக்கப்பட்டன. இவ்வேலை 14-4-52ல் முடிவடைந்தது. ஒவ்வொரு இரயில்வேயும் சுமார் 6000 மைல் நீளமுள்ளதாக அமைந்தது. இந்த ஏற்பாட்டினால் இந்தியா முழுமையிலுமுள்ள இரயில்வே தொழிலாளர்களுக்கும் ஒரேவிதமான சட்டதிட்டம், சம்பள விகிதம், வாழ்க்கை வசதி முதலியன செய்ய முடியுமென்று சொல்லப்பட்டது; ஆனால், அந்த முறையில் காரியங்கள் நடைபெறவில்லை.

"யூனிபாரம் (உடை) கொடுப்பதில் கூட சமநிலை ஏற்படுத்த முடியவில்லை. முன்னாள் எம். எஸ். எம் பகுதியில் பணிசெய்யும் பிரயாணச் சீட்டுப் பரிசோதிப்பவர்களுக்கு ஆறு சோடி உடுப்புகள் வழங்கப்படுகிறது. ஆனால் பழைய தென் இந்திய இரயில்வேயில் பணிசெய்வோருக்கு மூன்று சோடிதான் கொடுக்கப்படுகிறது. திருச்சியில் இருந்தவர்கள் ஓங்கோலுக்கும், கூடூருக்கும் மாற்றப்பட்டார்கள். அதிகாரிகள் கவனிக்கவேண்டிய எல்லை அதிகமாகிவிட்டபடியால், கடிதம் எழுதினால், பதில் சரியாக வருவதில்லை; குறைகளும் கவனிக்கப்படுவதில்லை. இதனால், உள்ள அமைப்பை மேலும் பல இரயில்வேக்களாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை வலுவடைந்தது. அதன் விளைவாக 1-8-55 அன்று 'தென் கிழக்கு இரயில்வே' என்ற ஏழாவது இரயில்வே அமைக்கப்பட்டது. மேலும் ஆறு இரயில்வேக்களாவது ஏற்பட்டால்தான் நிர்வாகம் செவ்வனே நடைபெறும் என்ற எண்ணத்தைப் பல நிபுணர்கள் தெரிவித்து வருகிறார்கள்.

"இந்த நிலையில், ஆந்திர சட்டசபை உறுப்பினரும், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினருமான திரு. வெங்கடேசுவரலு அவர்கள், ஆந்திரத்திற்குத் தனி இரயில் வேண்டுமென்று சட்டசபையில் கூறியதற்கு, 1956-ம் ஆண்டு அக்டோபர் 1-ந் தேதிக்குப் பின்னர் ஆவன செய்வதாக முதலமைச்சர் கோபால் ரெட்டி வாக்களித்துள்ளார். ஒரு மாநிலத்தில் பல இரயில்வேக்கள் இருப்பதால் இடையூறுகள் பல ஏற்படுகின்றன. மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசை அமுலாக்கிய பின், ஆந்திரர்களின் கோரிக்கையை மத்திய அரசாங்கம் பூர்த்தி செய்யுமென நம்புகிறேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி இரயில்வே அமைந்தால் அபிவிருத்தித் திட்டத்திலும் மாநில சர்க்கார் அக்கறை காட்டும். ஆந்திரத்திற்குத் தனி இரயில்வே அமைப்பு ஏற்படுத்துவதுடன், தமிழ் நாட்டிற்கும் தனிஇரயில்வே அமைக்கப்படவேண்டும்.

"தமிழ் நாட்டு சட்டசபை உறுப்பினர்களும், பார்லிமென்ற உறுப்பினர்களும் ஆந்திரர்களின் கோரிக்கை வெற்றி பெற உழைப்பதுடன், தமிழ் நாட்டிற்கும் தனி இரயில்வே அமைக்கப் பாடுபடும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்."

ஏட்டுச் சுரைக்காய்?

நாகபுரி, டிச. 4—

தொழில் நிர்வாகத்தில் உரிய இடங்களில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுப்பது, கூட்டுப் பேரம், ஒருவருக்கொருவர் கலந்தாலோசிப்பதற்கான ஏற்பாடுகள் ஆகிய கொள்கைகளில் நம்பிக்கை தெரிவித்து, அகிலஇந்தியத் தொழிலாளர்நல அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானங்கள்நிறை வேறியிருக்கின்றன. இவ்வாறு தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டுள்ள அதே மாநாட்டில்தான், 'நிர்வாகத்தை நடத்துவதில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுப்பது என்பது சாத்தியமில்லை' என்று மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத் துறையில் பங்கு என்பது சாத்தியமில்லை என்பதற்கு என்ன காரணம் என்பது பற்றியும் அம்மாநாட்டில் விளக்கமேதவும் தரப்படவில்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கது.

போர்ச்சுகல் மந்திரியின் போர்வெறி

வாஷிங்டன், டிச. 4—

"கோவாவைத்தன்னுடன் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று இந்தியா கூறுவது ஏகாதிபத்திய ஆசையினால்தான். அவசியமானால் இராணுவ பலத்தைக் கொண்டு கோவாவைப் பாதுகாக்க வேண்டுமானாலும்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம்,"

என்று, போர்ச்சுகல் வெளிநாட்டு அமைச்சர் பாலோ குன்ஹா என்பார் கூறியிருக்கிறார்.

"கோவா மீது ஆக்கிரமிப்பு நடந்தால் நாங்கள் அதனை எதிர்த்துப் போராடுவோம். நாங்கள் நசுக்கப்பட்டுவிடுவோம் என்பதையும் நாங்கள் அறியாமலில்லை; என்றாலும் அதனை எதிர்த்தே தீருவோம்; எங்களுடைய எதிர்ப்பும் வெகுகாலம் நீடித்து நிலை பெறாது என்பதையும் அறிவோம்; என்றாலும் கூட, எதிர்ப்புக்குத் தேவையான அளவிற்கு கோவாவில் துருப்புக்கள் இருக்கின்றன,"

என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவாமி லீக் மாநாடு ரத்து

சர்க்கார் தலையீடே காரணமாம்!

காங்கேல் (கி. பாக்), டிச. 4—

இந்நகருக்கு அருகாமையிலுள்ள காக்மரி எனும் இடத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்த அவாமி லீக் ஊழியர்கள் மாநாடு ரத்து செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது.

இரண்டு நாட்களுக்கு நடைபெறுவதாக இருந்த அம்மாநாட்டு நடவடிக்கைகளை எழுதிக்கொள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு வசதிகள் அளிக்கப்படவேண்டுமென்று, கிழக்கு பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் பாஷானிக்கு மாவட்ட மாஜிஸ்திரேட் விடுத்திருந்த உத்தரவை நிராகரித்தே இம்மாநாடு ரத்து செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதாம்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்கென எல்லைகாந்தி கபார்கான், அவாமி லீக் தலைவர் சுகரவர்த்தி ஆகியோருடன் மற்றும் பல தலைவர்களும் வந்திருக்கின்றனர். ஆனால், மாநாட்டில் கலந்துகொள்ளும்படி, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா, பிரதமர் சௌதரி முகமதலி, கி. வங்கப் பிரதமர் அபு உசேன் சர்க்கார் ஆகியோருக்கு பாஷானி அழைப்புவிடுத்திருந்தும், அவர்கள், அழைப்பை நிராகரித்து, வர இயலாதெனப் பதிலனுப்பினராம்.

ரூ. 16,30,500 செலவாம்!

"இந்தியத் தொழில்கள் கண்காட்சிக்காக 'எண்கோண மண்டபம்' அமைக்கவும், மற்றும் மின்சார உப-நிலையம் நிறுவுதற்காகவும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பது முதலிய காரியங்களுக்காகவும் இந்திய சர்க்கார் ரூ 16,30,500 செலவு செய்திருக்கிறார்கள்,"

என்று, இந்திய வர்த்தக அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

ரஷ்யா—பர்மா ‘அன்பளிப்பு’கள்

சோவியத் நாடு, பர்மாவிற்கு இனாமாக ஆயுதங்களும், இயந்திர தளவாடங்களும் வழங்கும் என்றும், அதற்குப் பதில் உதவி தருவது என்றில்லாமல், பர்மாவும், சோவியத் நாட்டிற்கு அரிசி இனாமாகத் தரும் என்றும் செய்திக் குறிப்புகள் கூறுகின்றன.

இந்த ‘அன்பளிப்பு’களை ஒருவருக்கொருவர் வழங்கிக்கொள்வதற்கென சோவியத் தலைவர்களுக்கும்—பர்மிய சர்க்காருக்குமிடையே இப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அச்செய்தி மேலும் விபரம் தந்திருக்கிறது.

‘நாங்களும் வெட்கப்படுகிறோம்’

“காலனி நாடுகள் தாங்கள் ஆதிக்கம் செலுத்திவந்த இடங்களில் புரிந்த செயல்களைக் கண்டு, ஐரோப்பியர் என்ற முறையில் நாங்களும் வெட்கித் தலை குனிய வேண்டியதாக இருக்கிறது”

என்று, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்சேவ், பர்மாவிலுள்ள மாண்டலே அருகில் ஐராவதி நதிக் கரையில் நடைபெற்ற அதிகாரிகள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“அன்னிய முதலாளித்துவ ஆதிக்கத்தை நீங்கள் தூக்கி எறிந்து விட்டு, விடுதலை பெற்றிருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பிரிட்டிஷார் உங்களை ஆண்டபொழுது, அவர்கள், உங்களுடைய பொருளாதாரம், கலாச்சாரம் எல்லாவற்றிலும் தலையிட்டார்கள். உங்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்குத் தங்களைக் கடவுளே அனுப்பி வைத்திருக்கிறார் என்று பிரச்சாரமும் செய்துகொண்டிருந்தனர்,”

என்றும், அவர் அக்கூட்டத்தில் பேசுகையில் மேலும் குறிப்பிட்டார்.

ரஷ்யத் தலைவர்களின் பேச்சுக்கள்

வின்ஸ்டன் சர்ச்சில் கருத்து

உட்போர்டு (எசெக்ஸ்), டிச. 5—

“ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் இந்தியாவிலும் பர்மாவிலும் நடந்துகொண்ட விதத்தை பிரிட்டிஷ் சர்க்கார் கவனமுடன் ஆராய்ந்து வருகின்றனர்; ஏனெனில், அந்தத் தலைவர்கள் இங்கிலாந்துவரும் போதும் அங்கு பேசியவற்றை வேறு ரூபங்களில் இங்கும் பேசுவதைத் தடுப்பதற்காகத்தான்;

“பர்மாவிலும், இந்தியாவிலும் அவர்கள் நடந்துகொண்ட விதம் ஒரு ஆச்சரியமான ‘காட்சி’தான்,”

என்று, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் சர். வின்ஸ்டன் சர்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாலெங்[illegible]காவ் : பதவி உ[illegible] [illegible]ர்வு பெறுகிறார்!

லண்டன், டிச. 5—

சென்ற பிப்ரவரியில், சோவியத் ரஷ்ய சர்க்காரின் பிரதம மந்திரி [illegible]ட்டத்திலிருந்து இறக்கப்பட்ட மாலெங்கோவ் மீண்டும் இப்போது ரஷ்ய அமைச்சரவையின் முதல் உதவித் தலைவராக நியமனம் பெற்றுள்ளார் என்ற தகவலை மாஸ்கோ வானொலி அறிவித்திருக்கிறது.

பிரதமர் பதவியை இழந்த பின்னர், மாலங்கோவ், வெறும் துணைப் பிரதமராக மட்டுமே இதுவரையிலும் இருந்து வந்திருக்கிறார்.

ஏழை மாணவர்களுக்குப் பல்கலைக் கழகக் கல்வி

ஹூமாயூன் கபீர் விளக்கம்

வால்டேர், டிச. 3—

“திறமையும், ஆர்வமும் கொண்ட மாணவ மாணவிகளுக்கு அதிகக் கல்வி வாய்ப்பு ஏற்படும் ரீதியில் கல்லூரிப் படிப்பை ஆக்குவதற்கு சர்க்கார் திட்டமிட்டு வருகின்றனர்”

என்று, இந்திய சர்க்கார் கல்வி இலாகா செயலாளர் ஹூமாயூன் கபீர் கூறியிருக்கிறார்.

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பல்வேறு திறமை ‘ஸ்காலர்ஷிப்பு’களைக் கொண்டு வருவதின் மூலம், திறமையான ஏழை மாணவ மாணவிகளுக்குக் கல்வி வாய்ப்பு ஏற்படும்படி செய்யலாம்” என்றும், அவர் கூறியிருக்கிறார்.

ஆந்திர பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் இவ்வாறு கூறிய அவர் மேலும் சொன்னார் :—

“இலட்சத்திற்கு மேல் மாணவ—மாணவிகள் பட்டமும், மேல் படிப்பும் பெறுகின்றனர். இவ்வளவு பேரும் இதற்குத் தகுதிதானு என்பது சந்தேகமாயிருக்கிறது ஆனால், இதற்கு மாறாக 70 இலட்சத்திற்கு மேற்பட்ட செகண்டரி பள்ளி மாணவர்களில் திறமை மிகுந்த பெரும்பாலானோருக்கு வசதி இல்லாமல்—மேற்படிப்புக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. இதனால் இருவித நஷ்டம் ஏற்படுகிறது.

“ஏழை மாணவர்களாக இருப்பதனால் திறமை படைத்தவர்களுக்கு பல்கலைக் கழகங்கள் செல்ல வாய்ப்பு மறுக்கப்படுவதனால் சிறந்த விவேகிகளை சமுதாயம் இழக்கிறது. திறமையோ, ஆர்வமோ இல்லாத மாணவ மாணவிகளின் குர்பலினால் கல்வித் தரம் குறைகிறது. இவை தான் அந்த இருவித நஷ்டங்களாகும்.

“இதர கட்டங்களில், கல்வியின் பயன் எப்படியாக இருந்தாலும் சரி பல்கலைக் கழகப் படிப்பை உத்தியோக சந்தர்ப்ப அவசியத்திற்கு மட்டும் கருதிப்பார்க்கக் கூடாது.”

விடுதலைக் கிளர்ச்சி : 40 பேர் பலி!

ஆல்ஜியர்ஸ், டிச. 5—

அல்ஜீரியா—டுனீஷியா எல்லைக் கருகேயுள்ள லாமி எனுமிடத்தில் நடைபெற்ற கலகம் ஒன்றின் விளைவாக 40 பேர் கொல்லப்பட்டனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

கலகக்காரர்கள் அடங்கிய மோட்டார் லாரி ஒன்று, பிரெஞ்சுத் துருப்புக்களால் பாதையில் போடப்பட்டிருந்த தடையை உடைத்துச் செல்ல முயற்சித்த போது அவர்கள்மீது பிரெஞ்சுத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 40 பேரை சுட்டு வீழ்த்தினர் என்று தெரிய வருகிறது.

லூதியானவில் தடியடி

லூதியானு, டிச. [illegible]—

இங்கு விதிக்கப்பட்டிருக்கும் 144 தடையுத்தரவை மீறி, மகா பஞ்சாப் ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஊர்வலத்தைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிய வருகிறது.

இதன் விளைவாக சுமார் 8 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும். பலர் காயமுற்றனர் என்றும் கூறப்படுகிறது.

தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் ஒரு அகாலி தளத்தைச் சேர்ந்த தொண்டரும், ஒரு மகா பஞ்சாப் முன்னணித் தொண்டரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

அலைந்து திரியும் சிறுவர்களுக்கு விடுதி

சென்னை, டிச. 6—

கட்டுப்பாடின்றி தெருப்பிச்சையாக அலைந்து திரிந்து கொண்டிருக்கும் 8 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர் - சிறுமிகளுக்கு நகரசபை நிர்மாணிக்கும் விடுதி இம்மாத இறுதியில் முடிவடைந்துவிடும் என்றும் இதில் சுமார் 500 சிறுவர் சிறுமிகளுக்கு இடவசதி இருக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவர்களுக்கு தொழில் கல்வியும் தரப்படுமாம்.

இந்த விடுதிக்காக, ரோட்டரி கிளப் ரூ 25,000 நன்கொடை அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி

‘சென்னையின் உதவி கிடைக்குமென நம்புகிறேன்’

முதன் மந்திரி மார்ஷல் விளக்கம்

சென்னை, டிச. 4—

சிங்கப்பூரில் உள்ள இந்திய இலங்கை மக்களுக்காக, துவக்க இடைநிலைக் கல்விசாலைகளில் தமிழ் மொழிக் கல்வி தருவதற்காக திட்டம் வகுத்திருப்பதாக சிங்கப்பூர் முதன் மந்திரி டேவிட் மார்ஷல் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

“இப்போதிருக்கிற காலனி கல்வி முறை அழியும் தருவாயிலிருக்கிறது ; அடுத்த ஆண்டுத் துவக்கத்திற்குள்ளாக புதியதொரு கல்வி முறையைப் புகுத்தத் திட்டமிட்டிருக்கிறோம் அந்தக் கல்வி முறைப்படி ஆங்கில. சீன, மலேயா, தமிழ் மொழிகள் கற்றுத் தரப்படும்.

“தமிழ்க் கல்வி போதிப்பதற்காகப் பாட புத்தகங்கள், ஆசிரியர்கள் பெறுவதற்கு, சென்னையின் உதவி கிடைக்கும் என நம்புகிறேன்,”

என்று, மார்ஷல் விமான நிலையத்தில் அவரைச் சந்தித்த பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

“பொதுச் செயலாளர் அறிக்கைக் கிணங்க நமது மாவட்டத்தில் உடனடியாக உறுப்பினர்கள் சேர்க்கும் முயற்சியில் கிளைக் கழகங்கள் ஈடுபட வேண்டுகிறேன். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கிளைகள், இன்னும் அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டுகிறேன். தங்களுக்கு எவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்கும் படிவங்கள் தேவைப்படுகிறது என்பதை உடனடியாக மாவட்டக் கழகத்துக்கு எழுதவும். புதிதாக ஆரம்பிக்கும் கிளைகள் தங்கள் கிராமத்துக்கு அருகாமையிலுள்ள கிளைக் கழகச் செயலாளரிடமோ அல்லது மாவட்டப் பிரதிநிதியிடமோ, அல்லது பொதுக் குழு உறுப்பினரிடமோ அனுமதி பெறுமல் எழுதுபவர்களுக்கு படிவங்கள் அனுப்பப்படமாட்டாது,”

என்று, திருச்சி மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் திருச்சி மாவட்ட தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கட்கும், அனுதாபிகட்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதுரை மாவட்டக் கழகக் கிளைகளுக்கு :

“15—12—55 அன்று, நிலக்கோட்டையில் மாவட்டக் கழகக்கூட்டம் நடக்க இருக்கிறது. அதற்குள் மாநில மாநாட்டு நிதி இதுவரையிலும் கொடுக்காதிருக்கிற கிளைக் கழகங்கள், உடனே தங்கள் பங்குத் தொகையை அனுப்பி வைப்பதோடு உறுப்பினர்கள் சேர்க்கும் பாரத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மாவட்ட நிதி அனுப்பாத கிளைக் கழகங்களுக்கு உறுப்பினர் சேர்க்கும் பாரம் அனுப்பப்படமாட்டாது என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்,”

என்று, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் முத்து அறிவிக்கிறார்.

‘சபையை ஒத்திவைக்க நேரிடும்’

‘கோரம்’ இல்லாத அவலம் குறித்து அனந்தசயனம் கண்டிப்பு

புதுடில்லி, டிச. 5—

“சபையில் இனிமேல் ‘கோரம்’ இருக்குமாறு கவனித்துக் கொள்ளவில்லையானல், தாம் சபைக் கூட்டத்தை ஒத்தி வைக்கவேண்டி நேரிடும்,”

என்று, மக்கள் சபை உதவித் தலைவர் அனந்தசயனம் ஐயங்கார் மக்கள் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்று, பிற்பகல், சபையில் ‘கோரம்’ இல்லாமல் இருந்ததைத் தோழர் எச். வி. காமத் சுட்டிக்காட்டி, ‘காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கட்குப் பிரதம அமைச்சரே சுற்றறிக்கை அனுப்பியிருந்தும்கூட அது பயன்தரவில்லையே’ என்று குறிப்பிட்டிருக்கிறார்

இறுதியில், ‘கோரம்’ மணிகள் அடித்த பின்னர், உறுப்பினர்கள் அனைவரும் சபைக்குள் ஓடிவந்தனராம் !

[அரசியலமைப்பு (7-வது திருத்த) மசோதா வாக்கெடுப்பின் போது பெருமளவு உறுப்பினர்கள் சபையில் இல்லாமல் இருந்ததற்கு வருத்தம் தெரிவித்து பிரதமர் சுற்றறிக்கை விட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.]

‘நான் ஆசிரியரல்ல’

“உறுப்பினர்கள் சபையில் வந்துள்ளனரா—இல்லையா என்பதைக் குறித்துக்கொண்டிருக்க நான் உபாத்தியாயரல்ல; இந்தக் காரியத்தை செய்வதும் நன்றாக இராது. சபையில் கூடியிருந்து ‘கோரம்’ இருக்கும்படி கவனிக்க வேண்டியது தங்களது கடமை என்று ஒவ்வொரு உறுப்பினரும் கருதவேண்டும்,”

என்று, அனந்தசயனம் அவர்கள் மேலும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்.

சபையில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் சபையின் நிகழ்ச்சிகளைக் கவனித்து, விவாத உரைகளைக் கேட்டு ‘கோரம்’ இருக்கும்படி கவனிக்க வேண்டியது ஒவ்வொரு உறுப்பினரின் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவை மாவட்ட

தி. மு. க. உறுப்பினர்கட்கு

“11—12—55 மாலை 4 மணியளவில் ஈரோடு, மாவட்டக் கழகக் கட்டிடத்தில் (எண் 342, நேத்தாஜி வீதி) மாவட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பொதுக் குழுவுக்கு உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுத்தல், மாநில மாநாட்டு நிதி, உறுப்பினர் சேர்த்தல், பொங்கல் வாரத்தில் அண்ணு, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்ஆகிய பொருட்கள்குறித்து ஆலோசிக்கப்படும். மாவட்டக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரவேண்டுகின்றேன்,”

என்று கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ கி. சம்பத் கேட்டுக்கொள்கிறார்.

புதுவை தி. மு. கழக

வட்டக்குழு உறுப்பினர்கட்கு

“11—12—55 காலை 9 மணியளவில் புதுவை தி. மு. கழக இல்லத்தில், வட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பொருள் : வரவேற்புக் கூட்ட வரவு–செலவு கணக்குப் பார்த்தல். ஒவ்வொரு கிளைச் செயலாளர்களும், நன்கொடை வசூல் புத்தகமும், சேரவேண்டிய பாக்கியையும் அவசியம் கொண்டுவர வேண்டுகிறேன்,”

என்று, புதுவை தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

சென்னை 43-வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

6—12—55, இரவு 8 மணிக்கு, சென்னை 43-வது வட்டக் கழகப் பணிமனையில், கிளைக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்

திருமணம்ஒத்திவைப்பு

“10—12—55 சனியன்று காலை 9 மணியளவில் காரைக்குடி ‘ஷண்முக விலாஸ்’ தியேட்டரில், எனக்கும்—தோழியர் இராஜம்மாளுக்கும், அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெறுவதாயிருந்த திருமணம், பெரும் புயல், மழை இவற்றினல் ஏற்பட்டுள்ள நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. திருமண நாள் பின்னர் அறிவிக்கப்படும்,”

என்று, எம். ஜி. ஆர். நாடக மன்றத்தைச் சேர்ந்த தோழர் ஆர். எம். வீரப்பன் அறிவிக்கிறார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

★

டிச. 8 சிங்காரவேலர் படிப்பகம், சென்னை
11 அலசூர் (பெங்களூர்)
14 திருவொற்றியூர் (திருமணம்)
15 நிலக்கோட்டை (திருமணம்)
16 பண்ணைக்காடு
18 குடந்தை

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.